<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.727/2022 பெயர்-சரண்யா நாள்.13.02.2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் பி.எஸ்.சி படித்துள்ளேன். எனக்கும், கணவர் செந்தில்குமாருக்கும் திருமணம் ஆகி 14 வருடங்கள் ஆகிறது. நான் இல்லத்தரசியாக உள்ளேன், வெளியில் எங்கும் வேலைக்கு செல்லவில்லை. கொரானாவிற்கு முன்பாக துணி வியாபாரம் செய்து வந்தேன். அப்ரஜித் டிரேடர்ஸ் என்ற டெக்ஸ்டைல் தொழில் செய்து வந்தேன். ஜிஎஸ்டி பதிவு இல்லை. உத்யோக ஆதார் எடுத்திருந்தேன், அதாவது சிறுதொழில் நிறுவனமாக பதிவு செய்திருந்தேன். என்னுடைய பெயரில்தான் பதிவு செய்யப்பட்டிருந்தது. என் கணவரின் படிப்பு சான்றிதழ் எதையும் நான் பார்க்கவில்லை. என் கணவரின் பெயர் மேற்படி சான்றிதழ்களில் செந்தில் என்றுதான் உள்ளதே தவிர செந்தில்குமார் என்று அல்ல என்றால் எங்களுடைய திருமண பத்திரிக்கையில் செந்தில்குமார் என்றுதான் உள்ளது. அரசு சான்றிதழ்களில் உள்ள பெயர்தான் ஒரு நபரின் உண்மையான பெயர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, என் கணவரின் ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை அனைத்திலும் செந்தில்குமார் என்றுதான் உள்ளது. என் மாமனாரின் பெயர் சிவம் என்ற சிவஞானம் ஆகும். மேற்படி அப்ரஜித் டிரேடர்ஸ் நிறுவனத்தின் உத்யோக ஆதார் மற்றும் ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். அப்ரஜித் டிரேடர்ஸ் நிறுவனத்தை என் கணவரின் சகோதரரான கார்த்தி என்பவர்தான் நடத்தி வருகிறார் என்றாலும், மேற்படி பெயரில் உள்ள நிறுவனத்தில் டெக்ஸ்டைல் தொழில் செய்யப்படவில்லை, ஆயில் தொழில்தான் செய்யப்படுகிறது என்றாலும் தவறு. ஒரே முகவரியில் அப்ரஜித் டிரேடர்ஸ் என்ற பெயரில் இரண்டு நிறுவனம் செயல்பட முடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அப்ரஜித் டிரேடர்ஸ் நிறுவனத்தை என் பெயரில் டெக்ஸ்டைல் தொழில் செய்து வந்தேன் என்பது தவறு என்றால் சரியல்ல. வருடத்திற்கு 4 லட்சம் மற்றும் அதற்கு மேல் எனக்கு வருமானம் வருவதாக காட்டி நான் வருமானவரி செலுத்தியுள்ளேன். என்னுடைய பெயரில் டெக்ஸ்டைல் தொழில் இருந்து வரும் வருமானம், வாடகையில் இருந்து வரும் வருமானம் அனைத்தையும் காண்பித்து, என் பெயரில் வருமானவரி செலுத்தி வருகிறேன். தற்சமயம் மேற்படி டெக்ஸ்டைல் நிறுவனம் நான் நடத்தாத நிலையில் எதனடிப்படையில்

வருமானவரி செலுத்தி வருகிறேன் என்றால் என்னுடைய பெயரில் உள்ள வீடு மற்றும் நிலங்களில் இருந்து வரும் வருமானத்திற்கான வருமானவரி செலுத்தி வருகிறேன். 9/1 ராஜா காடு, பெரியார் நகர் என்ற விலாசத்தில் அப்பார்ட்மெண்ட் ஒன்று எனது பெயரில் உள்ளது, அதில் வீடுகள் மற்றும் கடை வாடகைக்கு விடப்பட்டுள்ளது. விவசாயம் நிலம் சின்னியம்பாளையத்தில் உள்ளது, சர்வே எண் தற்சமயம் நினைவில் இல்லை. எனக்கு எந்தவித வருமானமும் இல்லை என்றாலும், என் கணவருடைய பேச்சை கேட்டுக்கொண்டு அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும், என் கணவரும், அவரது பெரியம்மா பிரபாவதி சங்கர் ஆகியோர் ஈரோடு விரைவு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 13.08.2019ல் ஒரே நாளில் எனக்கும், என் கணவருக்கும், இந்த வழக்கின் பிரதிவாதி வித்யா நாகராஜன் ரூ.5,50,000/-க்கு காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்தெந்த நேரங்களில் கொடுத்தார் என்றால் என் கணவருக்கு எப்போது காசோலை கொடுத்தார் என்று எனக்கு தெரியாது, எனக்கு காலை சுமார் 11 மணியளவில் திண்டல் போஸ்ட் ஆபிஸில் வைத்து கொடுத்தார். என் கணவர் பிரதிவாதி வித்யா நாகராஜனுக்கு கடன் கொடுத்த விவரம் அப்போது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் நான் பிரதிவாதி வித்யா நாகராஜனுக்கு கடன் கொடுத்த விவரம் அப்போது என் கணவருக்கு தெரியாது. அவ்வாறு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில் ரூ.5,50,000/- என்னுடைய வங்கி கணக்கில் இருந்ததற்கான ஆதாரம் உள்ளதா என்றால் முழு தொகையையும் வங்கியில் இருந்து எடுத்து கொடுக்கவில்லை, கையில் இருப்பு இருந்தது, அதிலிருந்து கொடுத்தேன். மேற்படி தேதியில் என் கையில் ரூ.5,50,000/- இருந்ததற்கான ஆதாரம் இல்லை என்றால் சரிதான், நான் கையில் தனியாக வைத்திருந்தேன். எம்.இளங்கோ என்பவரால் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.1197/2023 வழக்கின் பிரதிவாதியான எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை பெற்றும் ஆஜராகாத காரணத்தினால் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலைகளை என் கணவரின் அண்ணன் திருடி சென்றுவிட்டதாக கூறி, காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததால் அந்த வழக்கில் ஆஜராகவில்லை. மேற்படி வழக்கில் நான் ஆஜராகாமல் இருந்தால் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் என்பது தெரியுமா என்றால் தெரியும்.

அதேபோல் ஆர்.கே தியாகராஜன் என்பவரால் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.1190/2023 வழக்கின் பிரதிவாதியான நான் மேற்படி வழக்கில் அழைப்பாணை பெற்றும், ஆஜராகாத காரணத்தினால் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதேபோல் அவர் திருடி சென்ற காசோலையை பயன்படுத்தி நிறைய பேர்களை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். இளங்கோ மீதும், தியாகராஜன் மீதும் புகார் கொடுக்காத காரணம் என்னவென்றால் காசோலையை எடுத்து சென்றும், பயன்படுத்தியவர்களும், என் கணவரின் அண்ணன் மீதும், மாமியார் மீதும் புகார் கொடுத்துள்ளேன். தியாகராஜன் மீதும், இளங்கோ மீதும் புகார் கொடுக்கலாம் என்ற சங்கதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தியாகராஜனிடம் இருந்து 4 லட்சம் ரூபாய் கடன் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்துள்ள நிலையிலும், இளங்கோவிடம் இருந்து 2 லட்சம் ரூபாய் கடன் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்துள்ள நிலையிலும், அதனடிப்படையில் மேற்படி வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதில் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிட்டுள்ள நிலையிலும், இந்த வழக்கு பிரதிவாதிக்கு ரூ.5,50,000/- தொகை கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் அது தவறு. ஈரோடு மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் என் தகப்பனார் பார்த்தசாரதி, எனது கணவரின் அண்ணன் கார்த்தி மற்றும் என் கணவர் ஆகியோர் குற்றவாளிகளாக காட்டப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 ல் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் இறந்துபோன நபரின் கணக்கில் இருந்த 15 லட்சம் ரூபாய் தொகையை கையாளடல் செய்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)